# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

## சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி “கல்வி”

### கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



நல்ல அரசாங்கம் அமைய உயர்கல்வி பற்றிய அடிப்படை விழிப்புணர்வு மிக அவசியம். அரசியலில் நல்ல தலைவர்களை உருவாக்குகின்ற பொறுப்பு உயர்கல்வி மட்டும் தான் தருகிறது. அவ்விழிப்புணர்வைத் தருவது உயர்கல்வி மட்டுமே. கர்மவீரர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் அனைவர்க்கும் இலவசக் கல்வித் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்கு முன்னர்வரை கல்விக் கட்டணம் செலுத்தியே பள்ளிக் கல்வி பயின்றனர். 70 ஆண்டுகளுக்கு முன்பு என்னுடன் படித்த 80 மாணவர்களில் 7 பேர் மட்டுமே உயர்கல்வி படிக்கச் சென்றனர். நான் படிக்கின்ற காலத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் இருந்து வந்தனர். வட ஆற்காடு மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் மிகக் குறைவு. ஏனெனில், உயர் கல்வியில், வட ஆற்காடு மாவட்டம் பின்தங்கி இருந்தது. மாணவர்களின் உயர்கல்வி என்பது பெற்றோரின் பொருளாதாரத்தை வைத்தே முடிவு செய்யப்படுகிறது. 60 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கல்விக் கொள்கையில் 6 சதவிகிதம் கல்விக்குச் செலவிட வேண்டும் என்று இருந்தது. புதிய கல்விக்கொள்கையில் அதே 6 சதவிகிதம் கல்விக்குச் செலவிட வேண்டும் என்று முடிவெடுத்துள்ளனர். இன்றளவும் உயர்கல்விக்கு முழுமையான சதவிகிதத்தைக் கொடுக்கவில்லை. இந்நிலை மாற வேண்டுமென்றால் மத்திய அரசும், மாநில அரசும் உயர்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வளர்ந்த நாடுகளைப் போல நாமும் மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்றால் மத்திய அரசும், மாநில அரசும் உயர்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கல்லாமை ஒழித்தால், இல்லாமை இல்லாமலே போய்விடும் என்பதைக் கருத்தில்கொண்டு அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை 2012-இலிருந்து செயல்பட்டு வருகின்றது. அறக்கட்டளையால் பயன்பெற்றவர்களில் 68 சதவிகிதம் பேர் மாணவிகள்; 67 சதவிகிதம் மாணவர்கள் முதல்தலைமுறைப் பட்டதாரி ஆவார்கள். இவ்வறக்கட்டளையானது இதுவரை 9,858 மாணவர்களுக்கு ரூபாய். 11 கோடியே 86 இலட்சம் உயர்கல்விக்கு உதவித்தொகையாகக் கொடுத்து இருக்கின்றது.

### திரு. எம். வெங்கடசுப்பு, நிதிக்குழுத் தலைவர்



"கர்மவீரர் காமராஜர்" அவர்கள் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, மதிய உணவுத் திட்டத்தைக் கொடுத்துக் கல்விக் கண் திறந்து வைத்தார். அவரைப் போன்று நம்முடைய கல்விக்கோ. முனைவர். கோ. விசுவநாதன் அவர்கள் பள்ளிக்கல்வியை முடித்து, உயர்கல்விக்குச் செல்லாமல் இடைநின்ற இளைஞர்கள் உயர்கல்வி செல்வதற்காக உருவாக்கிய திட்டம்தான் "அனைவர்க்கும் உயர்கல்வி திட்டம்". சாதி, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து மாணவர்களும் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, உயர்கல்வி பயிலப் பொருளாதார காரணத்தால் இடைநிற்றல் இருக்க கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தோடும், இந்தியாவிற்கே ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தை முன்மாதிரி மாவட்டமாகக் கொண்டு வர வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தோடும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையைத் தொடங்கித் திறம்பட செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். அனைத்து மாணவர்களுக்கும் குறிப்பாக தாய் / தந்தையை இழந்த, முதல்தலைமுறைப் பட்டதாரி / பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு முக்கியத்துவம் அளித்துக் கல்வி உதவித் தொகை வழங்கி ஊக்கமளித்து மாணவர்களின் கனவை நனவாக்குகின்றார். விவேகானந்தர் இந்தியாவை முன்னேற்ற நூறு இளைஞர்கள் கேட்டார், நமது GV அவர்களோ ஆயிரக்கணக்கான இளைஞர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

தொண்டு செய்வதில் பெரும்பாலும் நமது பொதுவழக்கம், “கடைத் தேங்காயை எடுத்து, வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது”. ஆனால், அறக்கட்டளை இதுவரை பெற்ற நன்கொடைகளில் விஜடி குழுமம் மட்டும் 70 சதவிகிதம் நன்கொடை அளித்திருக்கிறது. இவ்வறக்கட்டளையில் என்னுடைய சிறிய பங்களிப்பும் இருப்பது நினைத்துப் பெருமிதம் கொள்கின்றேன்.

## மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டி நிகழ்வுகள்



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை 2025 ஜனவரி - பிப்ருவரி மாதத்தில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 86 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 8,010 மாணவ, மாணவியருக்கு உயர்கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளது. இவ்விழிப்புணர்வு மூலம் 12 ஆம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வியில் என்ன படிக்கலாம், எங்குப் படிக்கலாம், அதனுடைய தேவை மற்றும் உயர்கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கிராமப்புறங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளது.

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு – பகுதி II







2024-25 ஆம் கல்வியாண்டிற்கான கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான இரண்டாம்கட்ட நேர்காணல் 2025 ஜனவரி 07 முதல் மார்ச் 25 வரை நடைபெற்றது. இதில் வேலூர், காட்பாடி, கீ.வ. குப்பம், குடியாத்தம், பேர்ணாம்பட்டு, அணைக்கட்டு, கணியம்பாடி, மாதனூர், ஆலங்காயம், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், கந்திலி, நாட்றம்பள்ளி, ஆற்காடு, திமிரி, வாலாஜா, காவேரிப்பாக்கம், சோளிங்கர், நெமிலி, அரக்கோணம், மற்றும் சவ்வாது மலை ஒன்றியத்துக்குட்பட்ட 553 மாணவ, மாணவியர் தம் பெற்றோர்களுடன் கலந்துகொண்டனர். நேர்காணலின் மூலம் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பெற்றோர் மற்றும் மாணவர்களிடம் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை அறிய, அறக்கட்டளைப் பணியாளர்கள் உதவித்தொகை விண்ணப்பித்த மாணவர்களின் இருப்பிடத்திற்குச் சென்று, களப்பணி செய்து, தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.









## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை கல்வி உதவித்தொகை வழங்குதல் – பகுதி II





கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி 2025 மார்ச் 27 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கோயம்புத்தூரைச் சேர்ந்த கல்வியாளர் டாக்டர். பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், அறங்காவலர்கள் மற்றும் நிதிக்குழுத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் 1,182 மாணவ மாணவியர்க்கு ரூபாய். 1 கோடியே 20 லட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.









## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை திட்டம் "திருவண்ணாமலை மாவட்டம் அறிமுக விழா"

















அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைத் திட்டம் திருவண்ணாமலை மாவட்டம் அறிமுக விழா மற்றும் அனைத்து மேல்நிலைப்பள்ளிகள், உயர்கல்வி நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் சங்கங்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி 2025 ஜனவரி 30 அன்று திருவண்ணாமலை மாவட்டம், சேரியந்தல் இராஜா இராணி மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ முனைவர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராகத் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ. பாஸ்கர பாண்டியன் இ.ஆ.ப. அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் விஐடி துணைத் தலைவர் முனைவர். ஜி.வி. செல்வம், முன்னாள் வேளாண் துறை அமைச்சர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, SKP. திரு. கே. கருணாநிதி, திரு. சி. சுவாமி முத்தழகன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர், அறங்காவலர்கள், திருவண்ணாமலை மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், பேராசிரியர்கள், தொழில் வழிகாட்டி ஆசிரியர்கள் (Career Guidance Teachers) மற்றும் அனைத்துச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய இராஜா இராணி மஹால் உரிமையாளர் திரு. கே.அண்ணாதுரை, மண்டபத்தைக் கட்டணம் இல்லாமல் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஜோதிடர் ஆர்.குமரேசன், டி.எஸ்.எம். சிவகுமார், இராம ஜெயம் பஸ் உரிமையாளர் பாண்டியன் ஆகியோர் அறக்கட்டளையுடன் இணைந்து ஏற்பாடு செய்தனர்.



## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை கல்வி வளர்ச்சி குழு



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை ஜனவரி - ஜூன் 2025 அரையாண்டு நிகழ்வுகளை அறக்கட்டளை உறுப்பினர்களோடு கலந்தாலோசிக்கும்பொழுது இவ்வாண்டுமுதல் கல்வி வளர்ச்சிக் குழு அமைப்பதென்று முடிவுசெய்யப்பட்டது. வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள அறக்கட்டளை உறுப்பினர்கள் இணைந்து மாணவர்களின் கல்வி நலனுக்காக ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒரு கல்வி வளர்ச்சிக் குழுவும், ஒரு கல்வி வளர்ச்சிக் குழுவில் 21 உறுப்பினர்களும் இருப்பார்கள், அவர்கள் அத்தொகுதியில் மிகவும் முக்கியமான கல்வியாளர்கள், சமூக சேவகர்கள், நன்கொடையாளர்கள், தொழில் அதிபர்கள் ஆவார்கள். இந்தக் கல்வி வளர்ச்சிக் குழு ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டத்துக்குட்பட்ட சட்டமன்றத் தொகுதியிலுள்ள தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கும் மாணவர்களுக்கும் இடையில் ஒரு பாலமாக அமையவிருக்கின்றது.




## உயர்கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் வழங்குதல்: 2025 – 26

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகை பெற வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்ட மாணவ மாணவியர்களுக்கு 2025 மே 21 முதல் 31 வரை விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.



மாணவர்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் 17 உதவி மையங்கள் அமைத்து அவற்றின் மூலம் 11,215 மாணவ, மாணவியருக்கு உயர்கல்விக்கான உதவித்தொகை விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. விண்ணப்பம் வழங்கும் தகவல்கள் அனைத்து முன்னணி தமிழ் நாளிதழ்கள், சமூக ஊடகங்கள் மூலமும், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலமும் அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குச் சுற்றறிக்கைகள் மூலமும் தகவல்கள் வெளியிடப்பட்டன.



மாவட்ட வாரியாக விண்ணப்பங்கள் வழங்கப்பட்ட விவரம்

## SHINE பகுதி XV நிறைவு விழா SHINE பகுதி XVI தொடக்க விழா






அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, வேலூர் Pearltri Foundation சென்னை மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் சென்னை, இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE பகுதி XV பகுதி நிறைவு மற்றும் SHINE பகுதி XVI தொடக்க விழா விஐடி வளாகத்தில் 2025 ஜனவரி 07, அன்று நடைபெற்றது. வேலூர், விஐடி, உதவி துணைத் தலைவர் செல்வி. காதம்பரி ச. விசுவநாதன் அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். Talent Nurturing ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், மூத்த மேலாளர், திருமதி. ஜெயா எத்திராஜ், ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Sr. HR Partner திருமதி. ஸ்னிக்தா அகர்வால், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, உதவித் திட்ட இயக்குநர் திரு. ப. சுந்தர் ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.






## SHINE பகுதி XVI நிறைவு விழா SHINE பகுதி XVII தொடக்க விழா





அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை வேலூர், Pearltri Foundation சென்னை மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் சென்னை, இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி SHINE XVI பகுதி நிறைவு மற்றும் SHINE XVII பகுதி தொடக்க விழா விஐடி வளாகத்தில் 2025 ஏப்ரல் 07, அன்று நடைபெற்றது. வேலூர், விஐடி, நிர்வாக இயக்குநர், முனைவர். சந்தியா பெண்டாரெட்டி, அவர்கள் தலைமையேற்றுப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரையாற்றினார். Talent Nurturing ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், மூத்த மேலாளர் திருமதி. ஜெயா எத்திராஜ் CSR ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Pearltri Foundation உறுப்பினர், பொது மேலாளர் திரு. எஸ். சாத்தப்பன் மற்றும் ஆஸ்பயர் சிஸ்டம்ஸ், Sr. HR Partner திருமதி. ஸ்னிக்தா அகர்வால் மற்றும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, உதவித் திட்ட இயக்குநர் திரு. ப. சுந்தர் ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மற்றும் பெறப்போகும் மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.






## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

C.S . **கார்த்தி**



வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா, காமாட்சியம்மன் பேட்டையில் வசிக்கிறேன். அப்பா பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறார். நேஷனல் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பில் 80 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். உயர்கல்வி பயில விஐடி, வேலூர் எம்.டெக். மென்பொருள் பொறியாளர் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருவதாக உறவினர் மூலம் அறிந்து அறக்கட்டளையின் படிப்பு உதவித் தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில்

நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எங்கள் இருப்பிடத்திற்கு வருகை தந்து விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது Microsoft Dynamics 365 ஆலோசகராகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக் கனவை நனவாக்கிய அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு என் சார்பிலும் என் போன்ற மாணவர்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ.ரம்யா**



நான் இராணிப்பேட்டை மாவட்டம் இலாலாபேட்டை பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா நாளிதழ் முகவராக வேலை செய்கிறார். ஆற்காடு ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 78 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதைத் தமிழ் நாளிதழ்களில் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். பி.சி.ஏ. படிப்பில் ஆக்ஸிலியம் கல்லூரியில் சேர்ந்த எனக்கு அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது வேலூரில் உள்ள குளோபல் ஹெல்த் கேர் தனியார் நிறுவனத்தில் நிர்வாகியாகப் பணிபுரிகிறேன். என் போன்று உயர்கல்வி பயில்வதற்கு வசதியில்லாத மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்க ஊக்கமளித்துக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ச.அரவிந்தகுமார்**



என்னுடைய அப்பா, அம்மா இருவரும் தினசரி ஊதிய வேலை செய்து என்னைப் படிக்க வைத்தனர். திருப்பத்தூர் மாவட்டம், குனிச்சி மோட்டூர் பகுதியில் வசிக்கிறேன். குனிச்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 68 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை, பொருளாதார வசதியில்லாத மாணவர்களுக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கி வருவதை நண்பர்கள் மூலம் அறிந்து, அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். நான் தூய நெஞ்சக் கல்லூரியில் பி.எஸ்.சி. கணினி அறிவியல் படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்விற்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது சென்னையில் உள்ள H.T.C. Global Services, மென்பொருள் பொறியாளராகப் பணிபுரிகிறேன். எனக்கு கல்வி உதவித் தொகை வழங்கி என் உயர்கல்விக் கனவை நனவாக்கியும், நல்ல பணியில் சேரவும் என்னுடைய குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்திய அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


**வி.துர்காதேவி**




என்னுடைய சிறுவயதிலேயே அம்மா பிரிந்து சென்றுவிட்டார். அப்பா விவசாய ஊதிய வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஒன்றியம், சோழவரம் பகுதியில் வசிக்கிறேன். சோழவரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 57 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். உயர்கல்விக்கு, வேலூர், முத்துரங்கம் அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரியில் பி.காம். படிப்பில் சேர்ந்தேன். அறக்கட்டளையினர் நேரடியாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில்வதற்கு உதவித்தொகை வழங்கினார்கள். தற்பொழுது நான் சென்னை, தமிழ்நாடு காவல் துறையில், சிறைக் காவலராகப் பணிபுரிகின்றேன். என் உயர்கல்விக்கு, என் இலக்குகளை அடைவதில் உறுதுணையாக இருந்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு மிகவும் நன்றி உள்ளவளாக இருப்பேன், மேலும் என் போன்ற மாணவர்களின் உயர்கல்விக்கு அறக்கட்டளையைப் பரிந்துரை செய்கிறேன்.

# கல்வி உதவித்தொகை பெற்றோர்: 2012 - 2025: 9,858


## பாலினம்




## முதல்தலைமுறைப் பட்டதாரிகள்





## பாடப்பிரிவுகள்




- கலை / அறிவியல்
- பொறியியல் / தொழிற்கல்வி
- மருத்துவம்
- செவிலியர்
- மருத்துவம் / துணை மருத்துவம்
- ஆசிரியர் பயிற்சி, ஹோட்டல் மேனேஜ்மென்ட்
- மற்றவை

## பள்ளி வாரியாகப் பயனாளிகள்




- அரசுப் பள்ளி மாணவர்கள் (5,323)
- அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் (3,514)
- தனியார் பள்ளி மாணவர்கள் (1,021)

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கியோர்





### விஐடி குழுமம் மற்றும் தனியார் நிறுவனங்கள் நன்கொடை

விஐடி துணைத் தலைவர் உயர்திரு. சங்கர் விசுவநாதன் அவருடைய பிறந்தநாள் விழாவில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கினார். வேலூர் விஐடி நிர்வாக இயக்குநர் முனைவர். சந்தியா பெண்டாரெட்டி அவர்களின் பிறந்தநாளன்று அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கினார். சென்னை, சுந்தரம் பைனான்ஸ், டார்லிங் குழுமம், SRIYAH இன்சூரன்ஸ் முதலான நிறுவனங்கள், Corporate Social Responsibility (CSR) பெருநிறுவனங்கள் சமூகப் பொறுப்புணர்வின் நிதியை அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கினார்.





### அறக்கட்டளை உறுப்பினர்கள்



அறக்கட்டளையின் இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

உதவித் திட்ட இயக்குநர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர் பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 220 2196, 8428408872

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/c. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore - 632 014.
IFS Code : IDIB000V086

**DONATE**

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**
**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**